செ.வெ.எண்:947 8/12/09

<u>தாட்கோ நலத்திட்ட உதவிகள் வழங்குதல்</u>

தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 1974ல் கட்டுமானக் கழகமாக ஆரம்பிக்கப்பட்டது. 1980 முதல் இக்கழகம் தமிழகத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு பல்வேறு பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது,

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.100.00 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ95.12 கோடி ஆகும். மாநில அரசு மற்றும் மத்திய அரசு பங்கு மூலதனத்தில் 51:49 என்ற விகிதத்தில் வழங்குகிறது.

இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள்

அ) பொருளாதார மேம்பாட்டுத்திட்டங்களை செயல்படுத்துதல்.

ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஒப்படைக்கும் பல்வேறு கட்டுமான பணிகளை மேற்கொள்ளுதல்.

பொருளாதார வளர்ச்சிக்காக தாட்கோ கீழ்க்கண்ட திட்டங்களை சிறப்பு மைய உதவியிலிருந்து செயல்படுத்தி வருகிறது.

<u>1) மகளிருக்கான வேளாண் நிலம் வாங்கும் திட்டம்</u>

தமிழ் நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கிழே வாழும் ஆதிதிராவிட மக்களின் நில உடமையை அதிகரிக்கும் நோக்கில் மகளிருக்கான வேளாண் நிலம் வாங்கும் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2.5 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5.00 ஏக்கர் புஞ்சை நிலம் வாங்குவதற்கு அலகுத்தொகை ரூ.1.00 இலட்சம் வழங்கப்படுகிறது. நிலத்தை வளப்படுத்துவதற்காகவும் ரூ.1.00 இலட்சம் வழங்கப்படுகிறது. இத்தொகையில் 50 விழுக்காடு மானியமும் மீதமுள்ள 50 விழுக்காடு தேசிய பட்டியலினத்தோர் நிதி வளர்ச்சி கழக பருவ கடனாகவோ அல்லது வங்கி கடனாகவோ,

வழங்கப்படுகிறது. தமிழக அரசு இத்திட்டதின் கீழ் பதிவு செய்யும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணத்தில் 75 விழுக்காடு விலக்களித்துள்ளது.

இத்திட்டதின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் அடைந்த சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | பயனாளிகளின் எண்ணிக்கை | வாங்கப்பட்ட நிலங்களின் விவரம் (ஏக்கரில்) | | | (ரூ. கோடியில்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | புஞ்சை | நஞ்சை | மொத்தம் | மான்யம் | வங்கிக்கடன் | மொத்தம் |
| 2006–2007 | 2785 | 834.64 | 1890.57 | 2725.21 | 8.08 | 7.71 | 15.79 |
| 2007–2008 | 1142 | 556.36 | 601.27 | 1157.63 | 4.58 | 4.58 | 9.13 |
| 2008–2009 | 973 | 522.78 | 670.23 | 1193.01 | 3.52 | 3.65 | 7.17 |
| 2009–2010* | 900 | | | | 4.50 | 4.50 | 9.00 |

*நடப்பு ஆண்டில் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு 900 நபர்களுக்கு ரூ.9.00 கோடி செலவில் (ரூ.4.50 கோடி மானியம் மற்றும் ரூ.4.50 கோடி கடன்) இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இன்று விழுப்புரம் மாவட்டத்தை சார்ந்த 10 நபர்கள், மதுரை மாவட்டத்தை சார்ந்த 3 நபர்கள் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டத்தை சார்ந்த 10 நபர்கள் ஆக மொத்தம் 23 பயனாளிகளுக்கு பதிவு செய்த நில பத்திரங்கள் வழங்கப்படுகிறது. நலத்திட்ட உதவிகள் மொத்த மதிப்பு ரூ.19.11 இலட்சங்கள், இதில் மான்யம் ரூ.7.15 இலட்சமும் கடன் மற்றும் பயனாளி பங்குத்தொகை ரூ.11.96 இலட்சங்களும் ஆகும். இன்று வழங்கப்படும் நலத்திட்டத்தில் 26.14 ஏக்கர் நிலம் வாங்கப்படுகிறது (9.05 புஞ்சை நிலம் மற்றும் 17.09 ஏக்கர் நஞ்சை நிலம்). இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 2) தனிநபர் கடன்திட்டம்

18 முதல் 55 வயது வரையுள்ள தனிநபர்கள் வருவாய் ஈட்டக்கூடிய தொழில்கள் தொடங்குவதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 7.50 இலட்சங்கள் திட்ட

மதிப்புள்ள திட்டங்கள் அனுமதிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் திட்ட மதிப்பில் 30 விழுக்காடு அல்லது ரூ.25,000/– இதில் எது குறைவோ அது மானியமாகவும் 5 விழுக்காடு பயனாளி பங்குத்தொகையாகவும் மீதி வங்கிக்கடனாகவும் வழங்கப்படுகிறது. லாரி, டிராக்டர், விசைஉழவு இயந்திரம், சுற்றலா சிற்றுந்து, மினி லாரி, ஆட்டோ ரிக்ஷா, சிறுபால் பண்ணைகள், தையல் கடை மற்றும் கணினி மையம் அமைப்பது போன்ற திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டதின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் அடைந்த சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | பயனாளிகளின் எண்ணிக்கை | (ரூ. கோடியில்) | | |
|---|---|---|---|---|
| | | மான்யம் | வங்கிக்கடன் | மொத்தம் |
| 2006–2007 | 17048 | 16.03 | 25.34 | 41.37 |
| 2007–2008 | 6491 | 7.20 | 11.04 | 18.24 |
| 2008–2009 | 5814 | 6.59 | 12.88 | 19.47 |
| 2009–2010* | 8400 | 8.00 | 40.00 | 48.00 |

*நடப்பு ஆண்டில் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு இத்திட்டத்தின் கீழ் 8400 பயனாளிகளுக்கு ரூ.48.00 கோடி நிதியுதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ.8.00 கோடி மானியம் மற்றும் ரூ.40.00 கோடி கடனாகும்.

## <u>3) இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு த்திட்டம்</u>

18 முதல் 35 வயது வரையுள்ள ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.7.50 இலட்சங்கள் திட்ட மதிப்புள்ள திட்டங்கள் அனுமதிக்கப்படுகிறது. திட்ட மதிப்பில் 30 விழுக்காடு அல்லது ரூ.25,000/– இதில் எது குறைவோ அது மானியமாகவும் 5 விழுக்காடு பயனாளி பங்குத்தொகையாகவும் மீதி வங்கிக்கடனாகவும் வழங்கப்படுகிறது. லாரி, டிராக்டர், விசைஉழவு இயந்திரம், சுற்றலா சிற்றுந்து, மினி லாரி, ஆட்டோ ரிக்ஷா, போன்ற பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டதின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் அடைந்த சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | பயனாளிகளின் எண்ணிக்கை | (ரூ. கோடியில்) | | |
|---|---|---|---|---|
| | | மான்யம் | வங்கிக்கடன் | மொத்தம் |
| 2006–2007 | 1813 | 4.18 | 14.20 | 18.38 |
| 2007–2008 | 932 | 1.94 | 7.09 | 9.03 |
| 2008–2009 | 804 | 1.81 | 7.77 | 9.58 |
| 2009–2010* | 450 | 1.00 | 3.00 | 4.00 |

*நடப்பு ஆண்டில் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு இத்திட்டத்தின் கீழ் 450 இளைஞர்கள் பயன்பெறம் வகையில் ரூ 4.00 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகையில ரூ.1.00 கோடி மானியம் மற்றும் ரூ.3.00 கோடி கடனாக வழங்கப்படும்

இன்று தனிநபர் கடன் திட்டம் மற்றும் இளைஞர்களுக்ககான திட்டங்களின் கீழ் 427 பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. (இவற்றில் 30 ஆட்டோக்களும் அடங்கும்) இவற்றின் மொத்த மதிப்பு ரூ.1.74 கோடியாகும் ( ரூ.54.90 இலட்சம் மானியம் மற்றும் ரூ.1.19 கோடி கடன்)

## 4) மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி உதவி திட்டம்

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.60,000/– சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. இதில் ரூ.10,000/– மான்யமும் ரூ.50,000/– வங்கிக்கடனாகவும் சேர்த்து வழங்கி அவர்களின் உள் கடனாக வழங்க பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டதின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் அடைந்த சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | பயனாளிகளின் எண்ணிக்கை | (ரூ. கோடியில்) | | |
|---|---|---|---|---|
| | | மான்யம் | வங்கிக்கடன் | மொத்தம் |
| 2006–2007 | 84532 | 4.74 | 9.38 | 11.12 |
| 2007–2008 | 43338 | 2.22 | 4.04 | 6.26 |
| 2008–2009 | 16410 | 1.08 | 1.65 | 2.73 |
| 2009–2010* | 30000 | 2.00 | 3.50 | 5.50 |

*நடப்பு ஆண்டில் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு 2000 சுய உதவி குழுக்களுக்கு (30000- உறுப்பினர்கள்) பயன்பெற இத்திட்டத்திற்கு ரூ.5.50 கோடி செலவிடப்படும். இத்தொகையில் ரூ.2.00 கோடி மானியம் மற்றும் 3.50 கோடி கடனாகும்.

இன்று கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த 4 குழுக்கள் (48 உறுப்பினர்கள்), கிருஷ்ணகிரி மாவட்டத்தை சார்ந்த 66 குழுக்கள்(792 உறுப்பினர்கள்), தூத்துகுடி மாவட்டத்தை சார்ந்த 15 குழுக்கள் (180 உறுப்பினர்கள்)), திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த 5 குழுக்கள்ள (60 உறுப்பினர்கள்) மற்றும் விருதுநகர் மாவட்டத்தை சார்ந்த 8 குழுக்கள் (102 உறுப்பினர்கள்) ஆக மொத்தம் 98 குழுக்கள் (1182 உறுப்பினர்கள்) த்திட்டத்தின் கீழ் பயனடைகிறார்கள். நலத்திட்ட உதவிகள் மொத்த மதிப்பு ரூ.55.80 இலட்சங்களாகும். இதில் மான்யம் ரூ.9.80 இலட்சமும் கடன் ரூ.46.00 இலட்சங்களும் ஆகும்.

## 5) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார நிதியுதவி திட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்கள் தொடங்க நிதியுதவி செய்யப்படுகிறது. ஒரு குழுவிற்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பிலான திட்டங்களுக்கு நிதியுதவி அனுமதிக்கப்படுகிறது. திட்ட மதிப்பில் 50 விழுக்காடு அல்லது 2.50 இலட்சம் இதில் எது குறைவோ அது மான்யமாகவும் மீதி வங்கிக்கடனாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டதின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் அடைந்த சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | பயனாளிகளின் எண்ணிக்கை | (ரூ. கோடியில்) | | |
|---|---|---|---|---|
| | | மான்யம் | வங்கிக்கடன் | மொத்தம் |
| 2006–2007 | 47214 | 29.43 | 34.48 | 63.91 |
| 2007–2008 | 24913 | 14.01 | 15.83 | 29.84 |
| 2008–2009 | 12752 | 9.82 | 11.68 | 21.50 |
| 2009–2010* | 37500 | 25.00 | 25.00 | 50.00 |

*நடப்பு ஆண்டில் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு 2500 சுயஉதவி குழுக்கள் (37500 உறுப்பினர்கள்) பயன்பெற இத்திட்டத்திற்கு ரூ.50.00 கோடி செலவிடப்படும். இத்தொகையில் ரூ.25.00 கோடி மானியம் மற்றும் 25.00 கோடி கடனாகும்.

இன்று கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த 1 குழு (12 உறுப்பினர்கள்), கிருஷ்ணகிரி மாவட்டத்தை சார்ந்த 30 குழுக்கள் (360 உறுப்பினர்கள்), நாகப்பட்டிணம் மாவட்டத்தை சார்ந்த 14 குழுக்கள்ள (168 உறுப்பினர்கள்), மதுரை மாவட்டத்தைச் சார்ந்த 19 குழுக்கள் (228 உறுப்பினர்கள்) நீலகிரி மாவட்டத்தை சார்ந்த 5 குழுக்கள் (60 உறுப்பினர்கள்), தூத்துகுடி மாவட்டத்தை சார்ந்த 7 குழுக்கள்) (84 உறுப்பினர்கள்) ஆக மொத்தம் 76 குழுக்கள் (912 உறுப்பினர்கள்) இத்திட்டத்தின் கீழ் பயனடைகிறார்கள். நலத்திட்ட உதவிகள் மொத்த மதிப்பு ரூ.249.22 இலட்சங்களாகும். இதில் மான்யம் ரூ.112.00 இலட்சமும் வங்கிக்கடன் மற்றும் பயனளியின் பங்குத்தொகை ரூ.137.22 இலட்சங்களும் ஆகும்.

## 6)குடிமைப்பணி முதன்மைத் தேர்வு தேறியவர்களுக்கு நிதியுதவித்திட்டம்.

குடிமைப்பணி தேர்வு எழுதும் ஆதிதிராவிட இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு நபருக்கு ரூ.25,000/– வீதம் முதன்மைத் தேர்வில் தேர்ச்சிபெற்ற இறுதித்தேர்வு எழுதுவதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்த ரூ..25,000/–ல் ரூ.15,000/– புத்தகங்கள் வாங்குவதற்கெனவும்

ரூ.10,000/– இடைநிகழ் செலவுகளுக்காகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2007–2008 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டதின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் அடைந்த் சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை | மான்யமாக வழங்கபடும் தொகை மான்யமாக வழங்கபடும் தொகை ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2007–2008 | 146 | 36.50 |
| 2008–2009 | 150 | 37.50 |
| 2009–2010 | 86 | 21.50 |

இன்று இந்திய குடிமைப்பணி முதன்மைத்தேர்வில் தேர்ச்சி பெற்ற 86 நபர்களுக்கு நபருக்கு ரூ.25,000/– வீதம் மொத்தம் ரூ.21.50 இலட்சங்கள் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

<u>8.12.2009 அன்று வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் சுருக்கம்</u>

| வ. எண் | திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதியுதவி வழங்கப்படும் விவரம் (ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | மான்யம் | கடன் | மொத்தம் |
| 1 | நிலம் வாங்கும் திட்டம் | 23 | 7.15 | 11.96 | 19.11 |
| 2 | தனிநபர் கடன் திட்டம் | 400 | 48.15 | 88.39 | 136.54 |
| 3 | இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு திட்டம் | 27 | 6.75 | 30.77 | 37.52 |
| 4 | மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல் நிதித் திட்டம் | 1182 | 9.80 | 46.00 | 55.80 |
| 5 | மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பொருளாதாரா நிதியுதவி திட்டம் | 912 | 112.00 | 137.22 | 249.22 |
| 6 | இந்திய குடிமைப்பணித் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற நபர்களுக்கு நிதியுதவி திட்டம் | 86 | 21.50 | 0.00 | 21.50 |
| | மொத்தம் | 2630 | 205.35 | 314.34 | 519.69 |

## 08.12.2009 அன்று வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் சுருக்கம்

| வ. எண் | திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதியுதவி வழங்கப்படும் விவரம் (ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | மான்யம் | கடன் | மொத்தம் |
| 1 | மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம் | 23 | 7.15 | 11.96 | 19.11 |
| 2 | தனிநபர் கடன் திட்டம் | 400 | 48.15 | 88.39 | 136.54 |
| 3 | இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு திட்டம் | 27 | 6.75 | 30.77 | 37.52 |
| 4 | மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல் நிதித் திட்டம் | 1182 | 9.80 | 46.00 | 55.80 |
| 5 | மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பொருளாதரா நிதியுதவி திட்டம் | 912 | 112.00 | 137.22 | 249.22 |
| 6 | இந்திய குடிமைப்பணித் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற நபர்களுக்கு நிதியுதவி திட்டம் | 86 | 21.50 | 0.00 | 21.50 |
| | மொத்தம் | 2630 | 205.35 | 314.34 | 519.69 |

தாட்கோ

<u>பத்திரிகைச் செய்தி</u>

தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 1974ல் கட்டுமானக் கழகமாக ஆரம்பிக்கப்பட்டது. 1980 முதல் இக்கழகம் தமிழகத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு பல்வேறு பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது

தாட்கோ கீழ்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது,

1. மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம்
2. தனிநபர் கடன் திட்டம்.
3. இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம்
4. மகளிர் சுய உதவி குழுக்களுக்கான சுழல் நிதி திட்டம்
5. மகளிர் சுய உதவி குழுக்களுக்கான பொருளாதார நிதியுதவித் திட்டம்
6. மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி திட்டம்
7. குடிமைப்பணி முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்று இறுதி தேர்விற்கு தயார் செய்வதற்கான நிதியுதவி திட்டம்

மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ் 2.5 ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் வாங்குவதற்கு ரூ.1.00 இலட்சம் வரை 50% மான்யத்துடன் நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும் இந்நிலங்களை மேம்படுத்த ரூ.1.00 இலட்சம் நிதியுதவி 50% மான்யத்துடன் வழங்கப்படுகிறது. தமிழக அரசு இந்நிலங்களை மகளிர் பெயரில் பதிவு செய்வதற்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவு கட்டணத்தில் 75% விலக்களிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 4900 மகளிர் பயன் பெற ரூ.31.06 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தனிநபர் கடன் திட்டத்தின் கீழ் ரூ.7.50 இலட்சம் வரை தேவைப்படும் தொழில் தொடங்குவதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. திட்டத்தொகையில் 30% அல்லது ரூ.25000/- வரை மான்யம் தாட்கோவால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சுமை உந்து, எந்திர கலப்பை, விசை உழவு இயந்திரம், சீருந்து, சிறுசுமை ஊர்தி, தானியங்கி மூவுருளை உந்து, கணினி மையம் அமைத்தல் போன்றவற்றிற்கு நிதியுதவி அளிப்பட்டுவருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் 29353 நபர்களுக்கு ரூ.70.08 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்கள் தொழில் தொடங்க நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. திட்டத்தொகையில் 30% அல்லது ரூ.25000/- வரை தாட்கோவால் மானியம் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 3549 நபர்களுக்கு ரூ.36.99 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

9/10/08

மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு சுழல் நிதியாக குழுவிற்கு ரூ.10000/- மான்யம் மற்றும் ரூ.50000/- வரை வங்கி கடன் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 144280 மகளிருக்கு ரூ.23.11 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவி குழுக்கள் தொழில் தொடங்குவதற்காக பொருளாதார உதவி தாட்கோவினால் வழங்கப்படுகிறது. திட்டத்தொகையில் 50% அல்லது ரூ.2.50 இலட்சம் இதில் குறைந்த தொகை தாட்கோ மானியமாக வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 84879 மகளிர் பயன்பெற ரூ.115.25 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை திட்டத்தின் கீழ் மாவட்டங்களில் உடனடியாக உதவி தேவைப்படும் ஊனமுற்றோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்றோர், இனகலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டவர்களுக்கு ரூ.10000/- மானியமாக வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 10882 நபர்களுக்கு ரூ.8.30 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

குடிமைப்பணி முதன்மைத் தேர்வில் தேர்ச்சிப்பெற்று இறுதி தேர்வுக்குத் தயார் செய்யும் ஆதி திராவிட இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு ரூ.25000/- மானியமாக வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தில் 382 நபர்களுக்கு 95.50 இலட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

2009-10 ஆம்ஆண்டு மாண்புமிகுதமிழக துணை முதல்வர் அவர்களால் 2630 பயனாளிகளுக்கு ரூ.5.19 கோடி நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்தொகையில் ரூ. 2.05 கோடி தாட்கோ மானியமாகவும் ரூ.3.14 கோடி கடனாகவும் வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களால் மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ் 23 பயனாளிகளுக்கு நிலப்பத்திரம் வழங்கப்படுகிறது. தனிநபர் கடன் திட்டத்தின் கீழ் 400 பயனாளிகளுக்கும், இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 27 பயனாளிகளுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் தற்போது 30 நபர்களுக்கு ஆட்டோக்கள் வழங்கப்படுகிறது. இது தவிர சுய உதவி குழுக்களுக்கான சுழல் நிதியாக 1182 நபர்களுக்கும், பொருளாதார நிதியுதவி 912 நபர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

குடிமைப்பணி முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்று இறுதித் தேர்வுக்கு தயார் செய்யும் 86 நபர்களுக்கு நிதியுதவி மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களால் வழங்கப்படுகிறது.

19/9/10

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9